வாழ்வும் வரலாறும் ஒரு வழிப் பாதை.

மனிதன் வளர்ந்தால் அவனிடம் குழந்தை தன்மை இருக்கலாம்.
குழந்தை உள்ளம் இருக்கலாம்.

ஆனால் அங்கே குழந்தைப் பருவம் திரும்ப கிடையாது.
வரலாறும் அவ்வாறே. வாழ்ந்தவர்கள் திரும்புவதில்லை.

ஆனால் அவர்கள் வாழ்வில் நிலைத்திருக்க வழிவிட்டு நிற்பது வரலாறு ஒன்றே. அஞ்சலோட்ட வீரனின் வெற்றி அவனைத் தொடந்து ஓடும் வீரனின் கைதனில் ஒப்படைப்பது போன்றதுதான் வரலாறும்.

அங்கேதான் மனித வாழ்வும் சிறுகதையாகாது சிதையாது தொடர் கதையாகின்றது.

முன்னோர்கள் நட்ட மாங்கன்றில் இருந்து நல்லதோர் மாங்கனியைப் புசிக்கலாம். அங்கே வரலாறு கால் பதித்திருக்காது விடில் புசிக்கும் போது ஏற்படும் இனிமைதான் எங்கே.

அந்தவகையில் வாழும்போது தம்மை எதிர்காலம் நிலை நிறுத்த வேண்டும் என்பதற்காக அன்றைய மன்னர்கள் ஆலயங்களை அமைத்தார்கள். அங்கே அற்புதங்களை கொட்டிக் குவித்தார்கள்.

தஞ்சைப் பெரிய கோவில் இருக்கும் வரை ராஜ ராஜ சோழனும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

அவன் வழி வந்த சூரிய வர்மனும் சற்றும் சளைக்காது வரலாறு படைத்தான் கம்போடியாவில் அவன் கட்டிய “அங்கோர்வாட” ஆலயம். இதன் வரலாறு எத்தனை தமிழருக்கு இன்று தெரியும். அந்தக் கோவிலின் வீதியின் நீளம் மட்டும் மூன்று மைல்கள். உலக அதிசயத்தை தொட்டு நிற்கின்றது

கடல் கடந்து தமிழ் வளர்த்து சுமத்திரா ஜாவா வரை சென்றது மட்டுமல்லாது கிழக்காசியா முழுவதும் சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் இந்தோனேசியாவின் ஜாவாத் தீவில் கட்டப்பட்ட ஆலயங்கள் தமிழரின் கட்டிட சிற்க கலை நுணுக்கங்களை எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும் இவை தமிழர்களால் தான் கட்டபபட்டது என்ற வரலாற்று உண்மையை திட்டமிட்டே இருட்டடிப்புச் செய்யப்பட்டதுதான் வரலாற்றுத் தவறு.

.தமிழன் படைத்தது என்பதால் வரலாறு இடையே மறைந்து விட்டது. தமிழனாய் பிறந்த அனைவரும் செய்யும் தவறில் ஒன்று தமிழையும் தமிழர் வரலாற்றையும் பேணிப் பாதுகாக்க மறந்தமையால் தான் இன்று இந்த உலகம் தமிழன் எங்கெல்லாம் வாழ்ந்த போதும் தமிழனுக்கென்று ஒரு நாடு இல்லாது வாழ்கின்றான்.

அதனால் நாம் நம் மொழியை மண்ணை நேசிப்போம். அவ்வாறு வாழ்ந்தவர்களை பூசிப்போம். அஞ்சலோட்ட வீரர்களாக நம் கடமையை நம் எதிர்கால சந்ததியினர் கைதனில் ஒப்படைப்போம்.

நமது ஆதிகோவிலடியும் அவ்வாறுதான். இங்கே வாழ்பவர்களும் திறமைபடைத்தவர்கள் என்பது எமக்குத் தெரியாது போகலாம். ஆனால் எம்மிடம் உள்ள திறமை உலகத்தின் பார்வையில் தெரியும் அழவிற்கு வாழ்கின்றார்கள். வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் கடலோடிகளாகட்டும். கற்றுணர்ந்த மேதைகளாகட்டும். ஈழம் போற்றும் உன்னத தியாகிகளாகட்டும். இங்கே வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் வரலாறு மறப்பதற்கன்று. மறைப்பதறகன்று. எனவே ் துணிந்து நிற்போம் .துணையுடன் நிற்போம். நம் கைதனில் கருத்தினில் கிடைத்ததை வரலாறாக்கி வாழும் போது உருவாக்கி வருங்கால சந்ததியின் கைதனில் ஒப்படைப்போம்.

அதனால் உங்கள் தொடர்புகளை எமக்கு அனுப்புங்கள் . உங்கள் ஆக்கங்கள் எமக்கு ஊக்கமாகட்டும். அது தமிழர் நெஞ்சங்களில் வாழட்டும்.

நன்றி.